திரு. எஸ். சிவலோகம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாவட்டத் தலைநகர் கடலூரில் பதிவாளர் அலுவலகம் இருப்பதால் அதைச் சேர்ந்த காட்டுமன்னார் கோவில், சிதம்பரம் தாலுக்காக்களிலிருந்து 45 மைல் பொது மக்கள் செல்லவேண்டியிருப்பதால், பொது மக்கள் நலனைக் கருதி மறுபரிசீலனை செய்வாரா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. பொன். முத்துராமலிங்கம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஒரு ரெவின்யூ கோட்டத்திற்கு ஒரு துணைப் பதிவாளர் அலுவலகம் என்கிற அடிப்படையில் இந்த அரசு துணைப் பதிவாளர் அலுவலகங்களை நிர்மாணித்துக் கொண்டு வருகிறது. அதிலே சிதம்பரத்திலே துணைப் பதிவாளர் அலுவலகம் இல்லாமல் அனைவரும் கடலூருக்கு செல்ல வேண்டிய நிர்ப்பந்தம் இருக்கிறது. அதிலே பல்வேறு சங்கடங்கள் இருப்பதாக மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் தெரிவித்ததைப்போல் தூரமும் அதிகம் என்று இன்றைக்கு நமக்குத் தெரிவிக்கப்பட்டிருக்கிறது. எனவே, இவைகளையெல்லாம் முன்னுரிமை அடிப்படையில் அடுத்த ஆண்டு பரிசிலிக்கப்படும் என்று தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. எச். எம். ராஜு : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, துணைப் பதிவாளர் அலுவலகங்கள் அமைப்பதற்கு அடிப்படை விதிமுறைகள் யாவை என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. பொன். முத்துராமலிங்கம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் ஏற்கெனவே தெரிவித்தபடி ஒரு வருவாய்க் கோட்டத்திற்கு ஒரு துணைப் பதிவாளர் அலுவலகம் என்கின்ற அடிப்படையில் தமிழகம் முழுவதும் துணைப்பதிவாளர் அலுவலகங்கள் நிர்மாணிக்கப்பட்டு வருகின்றன.

முந்திரி ஆராய்ச்சிப் பண்ணை.

*1649. திரு. கோ. பூவராகன்: மாண்புமிகு வேளாண்மைத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) விருத்தாசலத்தில் அமைந்துள்ள முந்திரி ஆராய்ச்சிப் பண்ணைப் பகுதியில், கோவை விவசாயப் பல்கலைக் கழகம் புதிதாக பல கட்டிடங்கள் கட்ட எவ்வளவு ரூபாய் செலவிடப்பட்டது ?

1990 மே 5]

(ஆ) அந்தக் கட்டிடங்கள் எவ்வாறு பயன்படுத்தப் படுகின்றன ?

மாண்புமிகு திரு. வீரபாண்டி சோ. ஆறுமுகம் : பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) விருத்தாசலம் முந்திரி ஆராய்ச்சிப் பண்ணைப் பகுதியில் தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக் கழகம் ரூ. 33.52 இலட்சம் செலவில் பல கட்டி டங்களைக் கட்டியுள்ளது.

(ஆ) இக்கட்டிடங்கள் ஆராய்ச்சிப் பணிகளுக்காகவும், பயிற்சியாளர்கள் விடுதிகளாகவும் பயன்படுத்தப் பட்டு வருகின்றன.

9-25 மணி.

திரு. கோ. பூவராகன் : மாண்புமிகு சட்டப் பேரவைத் தலைவர் அவர்களே, என்னென்ன முந்திரி ஆராய்ச்சிப் பண்ணைப் பகுதிகள் அந்த இடத்தில் தொடங்கப்படு வதாக இருக்கிறது? அந்த ஆராய்ச்சிப் பண்ணைப் பகுதி களில் ஆட்கள் நியமிக்கப்பட்டு இருக்கிறார்களா ? இன்னும் நியமிக்கப்படவில்லை என்றால் எப்போது நியமிக்கப்பட இருக்கிறார்கள்.

மாண்புமிகு திரு. வீரபாண்டி சோ. ஆறுமுகம் : பேரவைத் தலைவர் அவர்களே, என்னென்ன ஆராய்ச்சிப் பண்ணைப் பகுதிகள் என்ற விவரம் என்னிடம் இல்லை. விருத்தாச் சலத்தில் அமைந்துள்ள முந்திரி ஆராய்ச்சிப் பண்ணைப் பகுதி யில் கோவை விவசாயப் பல்கலைக் கழகம் புதிதாக பல கட்டி டங்கள் கட்ட எவ்வளவு ரூபாய் செலவிடப்பட்டது என்பது மூலக் கேள்வி. அதற்கு நான் 33.52 இலட்சம் ரூபாய் செலவில் பல கட்டடங்கள் கட்டப்பட்டிருக்கின்றன என்று பதில் அளித்தேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : கட்டடத்திற்கு உள்ளே போக முடியும் என்றால் திரு. பூவராகன் வினாக் கேட் கலாம்.

திரு. கோ. பூவராகன் : மாண்புமிகு சட்டப்பேரவைத் தலைவர் அவர்களே, கட்டடத்திற்கு உள்ளேதான் போகி றேன். 33 இலட்சம் ரூபாய் செலவில் கட்டப்பட்டிருக்கிற அந்தக் கட்டடங்களை முழுமையாகப் பயன்படுத்துவதற்கு

என்னென்ன துறைகள் அந்த இடத்தில் துவங்கப்பட இருக்கின்றன? ஏற்கெனவே அந்தக் கட்டடங்கள் அந்தப் பகுதியில் கட்டப்பட்டு இருக்கின்றன. மேலும் புதிய கட்டடங்கள் கட்டப்பட இருக்கிறபோது விரிவான திட்டங்கள் ஏதாவது வர இருக்கின்றனவா ? என்னென்ன திட்டங்களுக்கு அங்கே ஏற்பாடு செய்வதாக இருக்கிறார்கள் என்பதை நான் அறிந்து கொள்வதற்காகத்தான் கேட்டேன். எனவே அந்த விவரங்களை அமைச்சர் அவர்கள் அளிக்கவேண்டும் என்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு திரு. வீரபாண்டி சோ. ஆறுமுகம் : பேரவைத் தலைவர் அவர்களே, அவர்கள் கேட்ட கேள்வி முந்திரி ஆராய்ச்சிப் பண்ணைப் பகுதியில் கோவை பல்கலைக் கழகம் புதிதாக பல கட்டடங்களைக் கட்ட எவ்வளவு ரூபாய் செலவு செய்யப்பட்டது என்பதுதான். எனவேதான் நான் அதற்கு மட்டும் பதிலளித்தேன். கட்டப்பட்டிருக்கிற கட்டடம்— ஆய்வுக்கூடத்திற்கு 9,76,000 ரூபாயும், பண்ணை எவிக் கட்டுப்பாட்டுக் கிடங்கு, செயல்முறைக் கூடம், திரை இல்லம், பயிற்சியாளர் விடுதி, பேராசிரியர் குடியிருப்பு ஆகிய கட்டடங்களுக்கு 7,87,000 ரூபாயும், பணியாளர்கள் குடியிருப்பு, இணைப் பேராசிரியர் குடியிருப்பு, துணைப் பேராசிரியர் குடியிருப்பு: ஓட்டுநர் குடியிருப்பு ஆகிய கட்டடங்களுக்காக 9,97,000 ரூபாயும்விருத்தாசலம் 'கிருஷிதவிக்ஞான்' கேந்திராவில் திரைஇல்லம் கட்ட 92,000 ரூபாயும் பணியாளர் குடியிருப்பு அலுவலகம் மற்றும் ஆய்வுக் கூடக் கட்டடம் மற்றும் விவசாயிகள் விடுதி ஆகியவற்றிற்கு 5 இலட்சம் ரூபாயும் ஆக மொத்தம் 33.52 இலட்சம் ரூபாய் கட்டடங்கள் கட்டப்பட்டு இருக்கின்றன.

குடிசை வாழ் மக்களுக்குப் பட்டா.

*2621 : திரு. அ. இரகுமான்கான்

மாண்புமிகு பொதுப்பணித்துறை அமைச்சர், கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா :

சென்னைப் பூங்கா நகர் தொகுதியில் பொதுப்பணித் துறைக்குச் சொந்தமான உட்வார்ப் (வால்டாக்ஸ் ரோடு யானைக்கவுனி) பகுதியில் குடிசை வாழ்மக்களுக்குப் பட்டா வழங்க அரசு முன்வருமா ?

மாண்புமிகு திரு. துரைமுருகன் : தலைவர் அவர்களே, சென்னை பூங்கா நகர் தொகுதியில் பொதுப்பணித் துறைக்குச் சொந்தமான உட்வார்ப் (வால்டாக்ஸ் ரோடு